## "காசியும் – தமிழகமும் – ஒரு பாரம்பரிய சம்பந்தம்"

### மதிப்புரை (திருமதி. பத்மா முத்துகிருஷ்ணன்)

காசியிலிருந்து தமிழகத்திற்கும், தமிழகத்திலிருந்து காசிக்குமான தொடர்பை, "ஆன்மிகம், கல்வி, கலாச்சாரம், பண்பாடு" என, பல கோணங்களிலும், மக்களுக்காக - மக்களின் ஆன்மாவுக்காக ஒளிவெள்ளமாய்ப் பாயும் தொடர்பை, நூலை கையில் எடுத்த உடனேயே, "முன் - பின் முகப்பு அட்டையே" விளக்கப் போதுமானதாய் உள்ளது; அழகிய இந்த அறிமுகமே அற்புதமாய் உள்ளது.

காசி – தமிழகம் ஆகிய இரு பகுதிகளுக்கு இடையே உள்ள பரிமாற்றங்கள், காலங்களைக் கடந்த அழுத்தமான பாரம்பரியத்தைக் கொண்டது என்பது, நூல் முழுதும் படித்தவுடன் மனதில் அழுத்தமாய்ப் பதிகிறது.

நேற்றைய பெருமையை, இன்றைய தலைமுறை உணர்வதற்கும், நாளைய தலைமுறை கொண்டாடுவதற்கும் உரிய அருமையான வரலாற்று ஆவணம் இந்நூல் - என்றால் மிகை ஆகாது.

நூலின் சிறப்பு குறித்து 'காஞ்சி சங்கராச்சாரியார் - சுவாமிகளும், காசி மடம் சுவாமிகளும் விளக்கி ஆசி வழங்கி இருப்பது இந்நூலுக்கு மகுடமாய்த் திகழ்கிறது.

முன்னுரையும், பின்னுரையான, "காலங்கள் முழுதும் பண்டைய இணைப்புகள்' - என்ற தொகுப்பும், ஆவணக்கோப்புகள், கள ஆய்வுப் புகைப்படங்கள் என, இவற்றை மட்டும் ஒரு பருந்துப்பார்வையாய்ப் பார்த்தாலே, நூலாசிரியர்களின் மெய்வருத்தம் பாரா கடும் உழைப்பு, களப்பணி, ஆராய்ச்சித்திறம், தேச - தெய்வபக்தியைப் புரிந்துகொள்ள முடிகிறது.

வண்ணப் படங்கள், வயது வேறுபாடின்றி அனைவரையும் ஈர்ப்பதாய், "காசி-இராமேஸ்வரம்" - உடனே செல்ல வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றன.

இராமேஸ்வரத் தீர்த்தம், புனிதம் மாறாமல் தூய்மைப் பேணப்பட வேண்டும் என்று கூறப்பட்ட ஆலோசனைகள் காசியைப் போல இராமேஸ்வரமும் மறுமலர்ச்சி பெற வழிகோலும்.

ஆராய்ச்சியாளர்களுக்கு, இந்நூல் நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளது.

ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற உயர்ந்த நோக்கத்தைப் புரியவைக்கிறது இந்நூல்.

"பாரதநாடு பார்க்கெலாம் திலகம் — நீர்
அதன் புதல்வர்; இந்நினைவு அகற்றாதீர்;"

என்ற பாரதியின் வாக்கை நினைவு படுத்தி, நம்மைப் பெருமிதம் கொள்ளவைக்கிறது இந்நூல்.

ஒவ்வொரு தமிழரும், தமிழ் எல்லை தாண்டி, இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும், பாரததேச எல்லைக்கப்பால், உலகம் முழுவதும் வாழும் இந்தியர் அனைவரும் இந்நூலைப் படித்தல் வேண்டும்; படித்தபின், அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசெலுத்தும் வகையால் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய பொக்கிஷம் இந்நூல் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

நம் பாரதத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்நூலைப் படைத்த "ஹரி-சோபனா" - இணையர் இறைவன் அருளால் நலமுடன் பல்லாண்டு வாழ்ந்திடவும் அரிய தொண்டுகள் பல புரிய வாழ்த்துகிறேன். இருவரும் என்றும் போற்றுதலுக்கு உரியவர்கள்.